FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301623

1. District : தஞ்சாவூர் மாவட்டம் | PS: V & AC காவல்நிலையம் | Year: 2026 ஆண்டு | FIR No.: 09 மு.த.அ. எண் | Date: 01.10.2026 நாள்

2. (i) Act சட்டம்: BNSS | Sections பிரிவுகள்: 106

(ii) Act சட்டம்: PC Act 1988 (as amended in 2018) | Sections பிரிவுகள்: 7, 7A, 8 r/w 12

(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 30.09.2026 | Date to : நாள் வரை 01.10.2026

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 15.15 hrs | Time to : நேரம் வரை 01.30 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.10.2026 | Time : நேரம் 13.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் about 50 KM South East

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி S.D.S. Polytechnic College, Palayam, Pattukottai

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — | District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. தென்னவன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் தென்னவன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 18.4.1974 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் தனியார் பட்டாசு ஆலை உரிமையாளர் (தொழில்) | (g) Address : முகவரி தஞ்சாவூர் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்படுகிறது

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tmt. P. Padmavathy ..... Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

01.10.26

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

1/10/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. ARUN PRASAD
Rank: நிலை Inspector of Police, எண்
VAC, Thanjavur

[FIR Contents in Column Number 12 of the Thanjavur V&AC Crime Number 09/2026, U/s 106 of BNSS and 7, 7A, 8 r/w 12 of Pc Act 1988 (as amended in 2018)-ன்தொடர்ச்சி..

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

இன்று 01.10.2026–ஆம் தேதி மதியம் 13.00 மணிக்கு தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருந்த போது தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு பொறுப்பு அலுவலர் திரு.S.ஷேக் உமர்ஷா, த/பெ. ஷேக் சுலைமான், துணை வட்டாட்சியர் (தேர்தல்), வட்டாட்சியர் அலுவலகம், பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் அவர்கள் கொடுத்த புகாரைப் பெற்று வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு, அனுப்புநர் திரு.S.ஷேக் உமர்ஷா, த/பெ. ஷேக் சுலைமான், துணை வட்டாட்சியர் (தேர்தல்), வட்டாட்சியர் அலுவலகம், ஆய்வுகுழ அலுவலர் (பொறுப்பு) பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர் ஐயா, தஞ்சாவூர் மாவட்டம், ஆய்வுக் குழு பொறுப்பு அலுவலர் ஆகிய நான் பட்டுக்கோட்டை, பாளையம், புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள பட்டுக்கோட்டை SDS பாலிடெக்னிக் காலேஜில் உள்ள காலியிடங்களுக்கான பதவியை நிரப்புவதற்காக கையூட்டாக பணம் பெறுவதாக வந்த ரகசிய தகவலின் படி, தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 30.09.2026 ஆம் தேதி பிற்பகல் 13.00 மணிக்கு வந்து அளித்த தகவலின்பேரில், 30.09.2026 பிற்பகல் 13.30 மணிக்கு தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திலிருந்து காவல் ஆய்வாளர் திரு.R.அருண்பிரசாத் அவர்கள் போலீஸ் பார்ட்டியினருடன் புறப்பட்டு, சுமார் 15.00 மணிக்கு மேற்படி பட்டுக்கோட்டை, பாளையத்தில் இயங்கிவரும் மேற்சொன்ன SDS பாலிடெக்னிக் காலேஜிற்கு அருகில் வந்து ஆங்காங்கே சந்தேகம் வராதவாறு நின்று கண்காணிக்கப்பட்டு, சுமார் 15.15 மணிக்கு திடீர் சோதனை ஆரம்பிக்கப்பட்டது.

(2) மேற்படி திடீர் சோதனையின் போது மாவட்ட ஆய்வுக்குழு சார்பாக ஆஜரான அலுவலர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குழுவில் இருந்த அலுவலர்கள் விபரம்:

(1) திரு.S.ஷேக் உமர்ஷா, த/பெ. ஷேக் சுலைமான், துணை வட்டாட்சியர் (தேர்தல்), வட்டாட்சியர் அலுவலகம், பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்,

(2) திரு.A.K. திரு.A.K.சந்தோஷ்குமார், த/பெ கிருஷ்ணமூர்த்தி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்

(3) திரு.R.அருண்பிரசாத், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, தஞ்சாவூர்.

(3) மேற்படி SDS பாலிடெக்னிக் கல்லூரியானது பட்டுக்கோட்டை, பாளையம், புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் சுற்றுசுவருடன் கூடிய சுமார் 20 ஏக்கர் நிலத்தில் செயல்பட்டு வருகிறது. அந்த சுற்றுசுவரில் வடகிழக்கு பகுதியில் ஆர்ச் வடிவிலான அமைக்கப்பட்டுள்ள நுழைவுவாயிலின் முகப்பில் இருப்பிலான பெரிய கேட் அமைக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து கல்லூரியின் மைதானம் உள்ளது. அதற்கு அடுத்து B–Block, C–Block, D–Block, F–Block, G–Block மற்றும் N–Block ஆகிய RCC கட்டிடங்கள் உள்ளது. மேலும் தகர சீட்டினால் கூரை வேயப்பட்ட E– Block மற்றும் Mechanic Workshop Lab ஆகியவை உள்ளன.

(4) மேற்படி கல்லூரியின் B–Block–ஆனது வடக்கு திசை பார்த்தவாறு அமைந்துள்ள RCC கட்டிடமாகும். அந்த B–Block–கட்டிடத்தில் B–101 முதல் B–104 வரையிலான அறைகள் உள்ளது. அதில் அறை எண். B–101–இல் SDS.Selvam B.E., LLB., Secretary என்ற பெயர் பலகையும், அதன்கீழ் M.Prabha ME, Correspondent என்ற பெயர் பலகையும் வைக்கப்பட்டுள்ளது. அதற்கு அடுத்தாற்போல் உள்ள அறை எண். B–102–இல் Store Room என்ற பெயர் பலகையும், அறை எண். B–103–இல் Account Section என்ற பெயர் பலகையும் மற்றும் அறை எண். B–104–இல் Communication Skill Lab என்ற பெயர் பலகையும் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி அறைகளில் CCTV Camera பொருத்தப்பட்டுள்ளது.

(5) மேற்படி பாலிடெக்னிக் கல்லூரியின் B–Block– கட்டிடத்தின் வாசலில் நின்றிருந்த பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்த திரு.K.பாஸ்கர், த/பெ. கிருஷ்ணசாமி என்பவரை விசாரிக்க, தான் பாலிடெக்னிக்கில் பம்பு ஆப்பரேட்டராக பணி செய்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய, தான் வைத்திருந்த மஞ்சள் நிற துணி பையிலிருந்து பேங்க செலானுடன் சுருட்டப்பட்ட நிலையில்

ரூ.1,32,000/–தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் பற்றி விளக்கம் கேட்க, கல்லூரில் அமைக்கப்பட்டுள்ள சோலார் சிஸ்டம் தொடர்பான லோனுக்காக பட்டுக்கோட்டை கனரா பேங்கில் கட்டுவதற்காக Correspondent மேடம் கொடுத்ததாக தெரிவித்தார். அது தொடர்பான கனரா பேங்கின் செலானை பரிசீலணை செய்தும், மேற்படி பாலிடெக்னிக் கல்லூரியின் Correspondent செல்வி.பிரபா அவர்களிடம் விளக்கம் கேட்டு, அந்த பணம் Correspondent செல்வி.பிரபா அவர்களிடம் பம்பு ஆப்பரேட்டர் திரு.பாஸ்கர் அவர்களது முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டது.

(6) மேற்படி B–Block கட்டிடத்தில் உள்ள B–101 அறையின் வடக்கு திசை பார்த்தவாறு மரத்திலான கதவுகள் கொண்ட நுழைவு வாசல் அமைந்துளளது. மேற்படி நுழைவு வாசலுக்கு அடுத்து மரத்திலான வரவேற்பு கேபின் அமைக்கப்பட்டுள்ளது. அந்த வரவேற்பு கேபினுக்கு எதிர்புறம் கிழக்கு பார்த்த வாசலுடைய கண்ணாடியினாலான கதவுகள் கொண்ட குளிர்சாதன வசதிகளுடன் கூடிய இரண்டு அறைகள் உள்ளது. அந்த இரண்டு அறைகளில் வடக்கு திசையில் அமைந்துள்ள முதல் அறையில் கிழக்கு நோக்கி டேபிள் சேர் போடப்பட்டும், இரும்பிலான பீரோ ஒன்றும் உள்ளது. அந்த முதல் அறையில் இருந்த பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்த செல்வி.M.பிரபா, ME., த/பெ முத்துசாமி என்பவரை விசாரிக்க, தான் பட்டுக்கோட்டை SDS Polytechnic College–இல் கடந்த 17.02.2021 முதல் Lecture ஆகவும், அதன் பின்னர் HOD ஆக பதவி உயர்வு பெற்றும், அதன் பிறகு கடந்த 03.03.2026 ஆம் தேதி முதல் Correspondent ஆகவும் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். மேற்படி நபரை சோதனை செய்தபோது, அவர் ரூ.1,28,340/– பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் பற்றி விளக்கம் கேட்க, Account Section–இல் Tuition Fees, Application Fees, Book Fees ஆகியவை மாணவர்களிடமிருந்து வசூல் செய்து தன்னிடம் கொடுத்ததை வைத்திருந்தாக தெரிவித்தார். அது தொடர்பான ஆவணங்களை Account Section–இல் பரிசீலனை செய்து, அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் ஆய்வுக்குழு அலுவலர்கள் முன்னிலையில் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

(7) மேற்படி B–Block கட்டிடத்தில் உள்ள B–101 அறையின் வரவேற்பு கேபினுக்கு எதிர்புறம் கிழக்கு பார்த்த வாசலுடைய இரண்டாவது அறையில் கிழக்கு நோக்கி டேபிள் சேர் போடப்பட்டும், கண்ணாடி கதவுகளுடன் கூடிய மரப்பீரோவும் உள்ளது. மேற்படி அறைக்கு SDS Polytechnic College–இன் Correspondent

செல்வி.M.பிரபா அவர்களை அழைத்துச்சென்று சோதனை செய்தபோது, அவர், Secretary–இன் டேபிளுக்கு கீழ் "ABC கோல்டு பேலஸ், தங்கம்*வெள்ளி*வைரம், 100% HUID Jewellery, வலிவலம், திருத்துறைப்பூண்டி, 04369–222007, 9790252149" என்ற லேபிள் எழுதப்பட்ட கருஊதா மற்றும் வெள்ளை நிற ரெக்சின் பேக் ஒன்றை எடுத்து ஆஜர் செய்தார். அந்த ரெக்சின் பேக்கை சோதனை செய்தபோது, அதன் உள்ளே பூப்போட்ட காவிநிற துணிப்பையில் ஐந்நூறு ரூபாய் நோட்டுக்கள் அடங்கிய பணக்கட்டுகள் இருந்தது. அந்த பணக்கட்டுகளை எண்ணிப்பார்க்க, அதில் 20 கட்டுகள் தலா ஐம்பதாயிரமாக மொத்தம் பத்து லட்சம் ரூபாய் இருந்தது. அந்த பணம் பற்றி விளக்கம் கேட்க, இன்று மதியம் சுமார் 03.00 மணியளவில் கல்லூரியின் (பொறுப்பு) முதல்வர் திரு.ரமேஷ் அவர்கள் தன்னிடம் விண்ணப்பதாரர் சிவராஜ்நாதன் அவரது அப்பா மற்றும் உறவினர் வைரப்பன் மற்றும் கணபதி கிருஷ்ணா, மாறன் ஆகியோரை தன்னிடம் அழைந்து வந்து பேசிக்கொண்டிருந்தபோது, கணபதி கிருஷ்ணா என்பவர் குணசேகரன் அவர்கள் கடனாக ரூ.10,00,000/– கொடுத்து அனுப்பியுள்ளதாகவும், அதனை கல்லூரியின் Secretary Sir திரு.SDS.செல்வம் அவர்களிடம் போன் செய்து கேட்டதாகவும், அவர் சொன்னதன்பேரில் கணபதி கிருஷ்ணா என்பவர் கொடுத்த ABC கோல்டு பேலஸ், தங்கம், வெள்ளி, வைரம் 100% HUID Jewellery வலிவலம், திருத்துறைப்பூண்டி 04369–222007, 9790252149 என்று அச்சடிக்கப்பட்ட கருஊதா மற்றும் வெள்ளை நிற ரெக்சின் பையில் வைத்து கொடுத்த பத்து லட்சத்தை வாங்கி Secretary அறையில் உள்ள Wooden Table இன் கீழ் வைத்ததாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் முன்னுக்குபின் முரணாக இருப்பதாலும், பணம் கடனாக வாங்கியதற்கான எந்தவித முகாந்திரம் இல்லாததால் மேற்சொன்ன பத்து லட்சம் பணத்தை கையூட்டு பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மகஜரில் கைப்பற்றப்பட்டது.

(8) இந்த திடீர் சோதனையில் மேற்படி B–101 அறையின் வரவேற்பு கேபினுக்கு அருகில் பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்த (1) திரு. மா. மாறன், வயது 48/2026, த/பெ.மாணிக்கம், 1/363, காவேரி தெரு, ஸ்ரீநகர், மதுரை, (2) திரு. ச. கோபிநாத், வயது 52/2026, த/பெ.சந்துரு, 4, முனியாண்டி கோவில் தெரு, வைத்தியநாதபுரம், மதுரை–16 மற்றும் (3) திரு.கணபதி கிருஷ்ணா, த/பெ வசந்தராவ், எண்.479, திரு.வி.க. நகர், பெரம்பூர், சென்னை (4) திரு.கு.மோகன், த/பெ.குருநாதன், 1/81, பிள்ளையார் கோயில் தெரு, ஆலத்தம்பாடி (அஞ்சல்),

திருவாரூர், (5) திரு.நா.மாரிசாமி, த/பெ. நாராயணசாமி, தெற்குத் தெரு, வேப்பஞ்சேரி, திருத்துறைப்பூண்டி தாலுக்கா, திருவாரூர், (6) திரு. க. வைரப்பன், த/பெ.கணபதி, 6/62 Q, R.P.S சாந்தா நகர், புலிவலம், திருவாரூர், (7) திரு.சிவராஜநாதன், த/பெ.மோகன், 1/81, பிள்ளையார் கோயில் தெரு, ஆலத்தம்பாடி (அஞ்சல்) திருவாரூர் ஆகியோர் நின்று கொண்டிருந்தனர்.

(9) மேலும் B-101 அறையின் வரவேற்பு கேபினுக்கு அருகில் நின்று கொண்டிருந்தவர்களில் திரு.மா.மாறன், வயது 48/2026, த/பெ.மாணிக்கம், 1/363, காவேரி தெரு, ஸ்ரீநகர், மதுரை என்பவரை விசாரிக்க, தான் Online Coaching Class நடத்திவருவதாகவும், கோயம்புத்துரில் பணிபுரிந்தபோது தனக்கு அறிமுகமான திரு.நடராஜன் என்ற ஆசிரியர் மூலமாக பட்டுக்கோட்டையில் உள்ள SDS பாலிடெக்னிக் கல்லூரியில் விரிவுரையாளர் பணியிடம் காலியாக உள்ளத் தகவலை தனது நண்பரான நடராஜன் மூலமாக அறிமுகமான சென்னையைச் சேர்ந்த குணசேகரன் என்பவர் சொல்ல, தான் தனது நண்பர் கோபியிடம் சொல்ல கோபி தனது நண்பர் வைரப்பன் என்பவரது உறவினருக்கு வேலை வாங்கித்தருவது தொடர்பாக கேட்டதாகவும் அதன்படி தானும் கோபியும் இன்றைக்கு பட்டுக்கோட்டை SDS பாலிடெக்னிக் கல்லூரிக்கு வந்து கோபியின் நண்பர்களான வைரப்பன், மோகன் மற்றும் சிவராஜநாதன் ஆகியோர் மற்றும் கணேஷ் என்பவருடன் பட்டுக்கோட்டை SDS பாலிடெக்னிக் கல்லூரி முதல்வரை சந்தித்ததாகவும், பின்னர் முதல்வருடன் Correspondent அறைக்கு சென்று கோபியின் நண்பரான வைரப்பன் என்பவரின் உறவினரின் மகன் சிவராஜநாதனுக்கு வேலை வாங்கித் தருவதற்காக ரூ.10,00,000/- பணம் கொடுத்தாகவும் அவரும் பணத்தைப் பெற்றுக்கொண்டு வேலை விசயமாக பின்னர் அறிவிப்பதாக சொன்னதாகவும், அந்த சமயத்தில் Vigilance Police வந்து சோதனை செய்து அந்தப் பணம் ரூ.10,00,000/-த்தைக் கைப்பற்றியதாகவும் தெரிவித்தார்.

(10) மேலும் B-101 அறையின் வரவேற்பு கேபினுக்கு அருகில் நின்று கொண்டிருந்தவர்களில் திரு.ச.கோபிநாத், வயது 52/2026, த/பெ.சந்துரு, 4, முனியாண்டி கோவில் தெரு, வைத்தியநாதபுரம், மதுரை-16 என்பவரை விசாரிக்க, தான் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் வணிகவியல் துறையில் தினக்கூலி பணியாளராக தற்காலிமாகப் பணிபுரிந்து வருவதாகவும் பல்கலைக்கழகத்திற்கு வந்து செல்லும் வகையில் ஆசிரியரான வைரப்பன் என்பவர் நண்பரானதும், அதே வகையில் விரிவுரையாளர் மாறனும் எனக்கு அறிமுகமானவர் என்றும், அந்த

வகையில் அவர் மூலம் பட்டுக்கோட்டையில் உள்ள SDS பாலிடெக்னிக் கல்லூரியில் காலிப்பணியிடம் இருப்பதாகத் தெரிந்த விவரத்தினை வைரப்பனிடம் கூறியதாகவும், அவர் தனது உறவினர் திரு.சிவராஜநாதன் என்பவருக்கு இந்த கல்லூரியில் வேலை வாங்குவது தொடர்பாக ஏதாவது செய்யும்படி கேட்டார். அதன்படி நான் மாறன் சாரிடம் விசயத்தை சொல்ல அவர் சென்னையில் உள்ள குணசேகரன் என்பவரிடம் பேசியிருப்பதாகவும் அவர் அனுப்பியுள்ள கணபதி கிருஷ்ணா என்பவரையும் அழைத்துக்கொண்டு பட்டுக்கோட்டை SDS பாலிடெக்னிக் கல்லூரி முதல்வரை சந்தித்ததாகவும் அப்போது முதல்வர் ரமேஷ் எங்களை அழைத்துக்கொண்டு கல்லூரியின் Correspondentஐ சந்தித்தபோது வைரப்பன் அவர்கள் தான் வைத்திருந்த ரூ.10,00,000/- பணத்தை Correspondent திருமதி. பிரபாவிடம் கொடுத்ததாகவும் அந்தப் பணம் வைரப்பன் என்பவரது உறவினரின் மகன் சிவராஜநாதனுக்கு வேலை வாங்கித் தருவதற்காக கொடுத்தப் பணம் என்றும், தனது நண்பர் மாறன் என்பவர் மூலமாக அறிமுகமான குணசேகரன் என்பவர் ஏற்கெனவே பேசிவைத்திருந்தவாறு வைரப்பன் மற்றும் மோகன் ஆகியோர் தான் ரூ.10.00.000/- பணத்தை சிவராஜநாதன் என்பவரின் வேலைக்காக Correspondent திருமதி.பிரபாவிடம் கொடுத்தார்கள் என்றும் தெரிவித்தார்.

(11) மேலும் B-101 அறையின் வரவேற்பு கேபினுக்கு அருகில் நின்று கொண்டிருந்தவர்களில் திரு.கணபதி கிருஷ்ணா, த/பெ வசந்தராவ், எண்.479, திரு.வி.க. நகர், பெரம்பூர், சென்னை என்பவரை விசாரிக்க, தான் சென்னையில் டிராவல்ஸ் நடத்திவரும் தனக்கு மிகவும் அறிமுகமான திரு.குணசேகரன் என்பவர் தன்னை பட்டுக்கோட்டையில் உள்ள SDS பாலிடெக்னிக் கல்லூரிக்கு சென்று அங்கு மாறன் என்பவரை சந்தித்து அவரையும் அவருடன் வரும் நபர்களையும் அழைத்துக்கொண்டு SDS பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் திரு.ரமேஷ் அவர்களை சந்திக்க சொன்னதாகவும், மற்ற விவரங்களை அவர் பேசிக்கொள்வதாகவும் கூறியதாகவும் அதன்படி நான் சென்னையில் இருந்து நேற்று இரவு புறப்பட்டு இன்று (30.09.2026) காலை 11.00 மணிக்கு பட்டுக்கோட்டை SDS பாலிடெக்னிக் கல்லூரிக்கு வந்து, கல்லூரி முதல்வர் திரு.ரமேஷை சந்தித்தாகவும், முதல்வர் ரமேஷ் அவர்களை Correspondent யிடம் அழைத்துச் சென்றதாகவும், அப்போது மோகன் என்பவர் அவரது மகன் சிவராஜநாதனுக்கு வேலை வாங்கித் தருவதற்காக Correspondent-யிடம் பணம் ரூ.10,00,000/- கொடுத்ததாகவும் கூறினார்.

(12) மேலும் B-101 அறையின் வரவேற்பு கேபினுக்கு அருகில் நின்று கொண்டிருந்தவர்களில் திரு.கு.மோகன், த/பெ.குருநாதன், 1/81, பிள்ளையார்

கோயில் தெரு, ஆலத்தம்பாடி (அஞ்சல்), திருவாரூர் என்பவரை விசாரிக்க, தான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதாகவும், தனது மகன் சிவராஜ்நாதன் B.E., (ECE) வரை படித்துள்ளதாகவும், SDS Polytechnic College ல் இருந்து வந்த வேலை வாய்ப்பிற்கான Notification–ஐ பார்த்து இன்று 30.09.2026 ஆம் தேதி தனது மகன், நெருங்கிய உறவினரான வைரப்பன், மாரிசாமி ஆகியோருடன் SDS பாலிடெக்னிக் கல்லூரிக்கு வந்ததாகவும், தனது மகன் SDS பாலிடெக்னிக் இருந்த ஒருவரிடம் Resume with Certificates –ஐ கொடுத்ததாகவும், அவர் சிவராஜ்நாதனை கல்லூரியின் முதல்வரை பார்க்க அழைத்து சென்றதாகவும், பின்னர் தானும் முதல்வருடன் கல்லூரியின் Correspondent அவர்களை சந்தித்ததாகவும், அப்போது கல்லூரியின் செயலாளர் அறையிலிருந்து தாங்கள் கைப்பற்றிய பத்து லட்சம் ரூபாய் பணம் மற்றும் அந்த வைக்கப்பட்டிருந்த ABC கோல்டு பேலஸ், தங்கம், வெள்ளி, வைரம் 100% HUID Jewellery வலிவலம், திருத்துறைப்பூண்டி 04369–222007, 9790252149 என்று அச்சடிக்கப்பட்ட கரும்ஊதா மற்றும் வெள்ளை நிற பையில் பற்றி கேட்டதாகவும், தான் யாருக்கு பணம் கொடுக்கவில்லை என்றும், அந்த ABC கோல்டு பேலஸ் என்ற பையில் சிவராஜ்நாதன் தனது மகன் Certificate–ஐ வைத்து எடுத்து வந்ததாகவும் தெரிவித்தார். பின்னர் மேற்படி நபரை சோதனை செய்ததில், தன்னிடமிருந்த ரூ.13,000/– பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் பற்றி விளக்கம் கேட்க, தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

(13) மேலும் B–101 அறையின் வரவேற்பு கேபினுக்கு அருகில் நின்று கொண்டிருந்தவர்களில் திரு.க.வைரப்பன், த/பெ.கணபதி, 6/62 Q, R.P.S சாந்தா நகர், புலிவலம், திருவாரூர், என்பவரை விசாரிக்க, தான் திருவாரூர் மாவட்டம், மணலி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து வருவதாகவும், தானும் மாரிசாமியும் நெருங்கிய உறவினர் என்றும், திரு.மோகனுடன் அவரது மகன் சிவராஜ்நாதனுக்கு வேலை வாங்குவது தொடர்பாக SDS பாலிடெக்னிக் கல்லூரிக்கு வந்து, அங்கிருந்த ஒருவரிடம் Resume with Certificates –ஐ கொடுத்ததாகவும், அவர் சிவராஜ்நாதனை கல்லூரியின் முதல்வரை பார்க்க அழைத்து சென்றதாகவும், பின்னர் முதல்வருடன் கல்லூரியின் Correspondent அவர்களை சந்தித்ததாகவும், அப்போது கல்லூரியின் செயலாளர் அறையிலிருந்து தாங்கள் கைப்பற்றிய பத்து லட்சம் ரூபாய் பணம் மற்றும் அந்த வைக்கப்பட்டிருந்த ABC கோல்டு பேலஸ், தங்கம், வெள்ளி, வைரம் 100% HUID Jewellery வலிவலம், திருத்துறைப்பூண்டி 04369–222007, 9790252149 என்று அச்சடிக்கப்பட்ட கரும்ஊதா மற்றும் வெள்ளை நிற பையில் பற்றி கேட்டதாகவும், அந்த பையில்

சிவராஜ்நாதன் தனது Certificate–ஐ வைத்து எடுத்து வந்ததாகவும் தெரிவித்தார். பின்னர் மேற்படி நபரை சோதனை செய்ததில், தன்னிடமிருந்த ரூ.16,500/– பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் பற்றி விளக்கம் கேட்க, தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

(14) மேலும் B–101 அறையின் வரவேற்பு கேபினுக்கு அருகில் நின்று கொண்டிருந்தவர்களில் திரு.சிவராஜநாதன், த/பெ.மோகன், 1/81, பிள்ளையார் கோயில் தெரு, ஆலத்தம்பாடி (அஞ்சல்) திருவாரூர் என்பவரை விசாரிக்க, தான் B.E., (ECE) படித்துள்ளதாகவும், SDS Polytechnic College–இல் இருந்து வந்த வேலை வாய்ப்பிற்கான Notification–ஐ பார்த்து, PA to Principal பணிக்காக அப்ளை செய்வதற்காக தனது Resume மற்றும் மற்ற சான்றிதழ்களுடன் தனது அப்பா மோகன் மற்றும் தனது அக்காவின் மாமனார் திரு.மாரிசாமி ஆகியோர்களுடன் வந்ததாகவும், அப்போது கல்லூரியின் செயலாளர் அறையிலிருந்து தாங்கள் கைப்பற்றிய பத்து லட்சம் ரூபாய் பணம் மற்றும் அந்த வைக்கப்பட்டிருந்த ABC கோல்டு பேலஸ், தங்கம், வெள்ளி, வைரம் 100% HUID Jewellery வலிவலம், திருத்துறைப்பூண்டி 04369–222007, 9790252149 என்று அச்சடிக்கப்பட்ட கரும்ஊதா மற்றும் வெள்ளை நிற பையில் பற்றி கேட்டதாகவும், பணத்தை பற்றி எந்த விபரம் தெரியாது என்றும், தாங்கள் காட்டிய ரெக்சின் பையில் தனது சான்றிதழ்களை வைத்திருந்தாகவும் தெரிவித்தார். மேற்படி நபரை சோதனை செய்ய, அவரிடம் பணம் எதுவுமில்லை.

(15) மேலும் B–101 அறையின் வரவேற்பு கேபினுக்கு அருகில் நின்று கொண்டிருந்தவர்களில் திரு.நா.மாரிசாமி, த/பெ. நாராயணசாமி, தெற்குத் தெரு, வேப்பஞ்சேரி, திருத்துறைப்பூண்டி தாலுக்கா, திருவாரூர் மற்றும் திரு.ரா.கார்மேகம், த/பெ.ராமச்சந்திரன், 5/12, வடக்கு குத்தகை, ஆயக்காரன் புலம்–1 (அஞ்சல்), வேதாரண்யம், நாகப்பட்டிணம் ஆகியோர்களை சோதனை செய்ய, தாங்களிடமிருந்து ரூ.8000/– மற்றும் ரூ.60/– முறையே எடுத்து ஆஜர் செய்ததாகவும், அந்த பணம் பற்றி விளக்கம் கேட்டு, தங்களது சொந்த செலவிற்காக வைத்திருந்தாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவர்களது பணம் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

(16) இந்த திடீர் சோதனையில் மேற்படி கல்லூரியின் B–Block கட்டிடத்தில் உள்ள B–102 அறையானது Store Room ஆக பயன்படுத்தப்பட்டு வருகிறது. அந்த

அறைக்கு வடக்கு திசை பார்த்தவாறு மரத்திலான கதவுகள் கொண்ட வாசல் அமைந்துளளது. மேற்படி நுழைவு வாசலுக்கு அடுத்து கண்ணாடி தடுப்புகள் கொண்டு பிரிக்கப்பட்டு, அந்த அறைக்குள் புத்தகங்கள் நோட்டுகள் மற்றும் சீருடைகள் ஆகியவை அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. மேற்படி அறையை சோதனை செய்ததில் சந்தேகத்திற்கிடமான எந்தவித பணமோ பொருட்களோ காணப்படவில்லை.

(17) இந்த திடீர் சோதனையில் மேற்படி கல்லூரியின் B-Block கட்டிடத்தில் உள்ள B-103 அறையானது Account Section ஆக பயன்படுத்தப்பட்டு வருகிறது. அந்த அறைக்கு வடக்கு திசை பார்த்தவாறு மரத்திலான கதவுகள் கொண்ட வாசல் அமைந்துள்ளது. மேற்படி நுழைவு வாசலுக்கு அடுத்து கண்ணாடி தடுப்புகள் கொண்டு கேபினாக பிரிக்கப்பட்டு, இரு Cash Counter உள்ளது. அந்த அறையின் கிழக்கு சுவற்றில் இரும்பினாலான இராக்குகள் அமைக்கப்பட்டு, அதில் கணக்கு தொடர்பான கோப்புகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி அறையை சோதனை செய்ததில் சந்தேகத்திற்கிடமான எந்தவித பணமோ பொருட்களோ காணப்படவில்லை. இந்த B-103 அறைக்கு அடுத்துள்ள B-104 அறையை சோதனை செய்ய, அதில் எந்தவித பணமோ பொருட்களோ காணப்படவில்லை.

(18) இந்த திடீர் சோதனையின்போது பட்டுக்கோட்டை SDS பாலிடெக்னிக் கல்லூரியில் C-Block கட்டிடத்தில் தரைத்தளத்தில் அறை எண். C101-இல் கல்லூரியின் முதல்வர் அறை அமைந்துள்ளது. அந்த அறையில் பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்த திரு.க.ரமேஷ், த/பெ.கணேசன் என்பவரை விசாரிக்க, தான் விரிவுரையாளராக பணிபுரிந்து வருவதாகவும், தற்போது இந்த பாலிடெக்னிக் கல்லூரியின் பொறுப்பு முதல்வராக பணிபுரிந்து வருவதாகவும், இன்று மதியம் சிவராஜ்நாதன் மற்றும் சுபா ஆகியோர்கள் கல்லூரிக்கு வந்து தன்னை பார்த்ததாகவும், பின்னர் அவர்களிடம் விபரங்களை விசாரித்து, பின்னர் அவர்கள் கேட்டுக் கொண்டதன்பேரில் Correspondent செல்வி.M.பிரபா அவர்களை சந்திக்க அழைத்து சென்றதாகவும், கல்லூரி செயலாளர் அறை மற்றும் தாளாளர் அறையில் தாங்கள் சோதனை செய்து 10 லட்சம் பணம் கைப்பற்றியதாகவும் தெரிவித்தார். மேற்படி கல்லூரியின் முதல்வர் அறையையும் அதற்கு அடுத்து அமைந்துள்ள அலுவலக அறையையும் சோதனை செய்ததில் சந்தேகத்திற்கிடமான எந்தவித பணமோ பொருட்களோ காணப்படவில்லை.

(19) இந்த திடீர் சோதனையின்போது பட்டுக்கோட்டை SDS பாலிடெக்னிக் கல்லூரியில் பணியிலிருந்த கீழ்கண்ட ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்கள் சோதனை செய்யப்பட்டு, அவர்களால் ஆஜர் செய்யப்பட்ட தொகைகள் மற்றும் விளக்கங்களின் விபரங்கள் பின்வருமாறு:

வ. எண்.	கல்லூரியின் பணியாளர்களின் விபரம்	வைத்திருந்த தொகை	தொகை திரும்ப ஒப்படைக்கப்பட்டதற்கான காரணம்
1)	திரு,ஜெ. ராஜமாணிக்கம், வயது 57/2026, த/பெ.ஜெகநாதன், உடற்கல்வி இயக்குநர், SDS பாலிடெக்னிக் கல்லூரி, பட்டுக்கோட்டை.	ரூ.15.000/-	விவசாயத்திற்காக உரம் வாங்குவதற்கும் ஆட்களுக்கு கூலி கொடுப்பதற்காகவும் வைத்திருந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்தப் பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
2)	திரு.ம.ஹென்றி சேவியர், வயது 54/2026, த/பெ.மரியசூசை, திறன்பெற்ற ஆய்வக உதவியாளர், SDS பாலிடெக்னிக் கல்லூரி, பட்டுக்கோட்டை.	ரூ.500./	தனது வண்டிக்கு பெட்ரோல் மற்றும் சொந்த செலவிற்காகவும் வைத்திருந்ததாக கூறினார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்தப் பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
3)	திரு.அ.லெட்சுமி கணபதி, வயது 38/2026, த/பெ, ச. அறிவழகன், விரிவுரையாளர் (ECE). SDS பாலிடெக்னிக் கல்லூரி, பட்டுக்கோட்டை.	ரூ.2420/-	தனது சொந்த செலவிற்காகவும் வீட்டிற்கு பொருட்கள் வாங்குவதற்காகவும் வைத்திருந்ததாக கூறினார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்தப் பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
4)	திரு. கோ. பொன்னுசாமி, வயது 52/2026, த/பெ.கோவிந்தசாமி, System Manager (சுயநிதிப் பிரிவு), SDS பாலிடெக்னிக் கல்லூரி, பட்டுக்கோட்டை.	ரூ.170	தனது வண்டிக்கு பெட்ரோல் மற்றும் சொந்த செலவிற்காகவும் வைத்திருந்ததாக கூறினார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்தப் பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
5)	திரு. ச. சிவகுமார், வயது 33/2026, த/பெ.சந்திரன், விரிவுரையாளர் (சுயநிதிப் பிரிவு), SDS பாலிடெக்னிக் கல்லூரி, பட்டுக்கோட்டை.	ரூ.650/-	தனது சொந்த செலவிற்காகவும் வைத்திருந்ததாக கூறினார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்தப் பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

6)	திரு. நே. தர்மலிங்கம், த/பெ.நேரு, விரிவுரையாளர் (சிவில்), (சுயநிதிப் பிரிவு), SDS பாலிடெக்னிக் கல்லூரி, பட்டுக்கோட்டை.	ரூ.100.0	வண்டிக்கு பெட்ரோல் செலவிற்காக வைத்திருந்ததாக கூறினார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்தப் பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
7)	திருமதி. ரா. மாரியம்மாள், வயது 50/2026, த/பெ. ராஜமாணிக்கம், விரிவுரையாளர், (சுயநிதிப் பிரிவு), SDS பாலிடெக்னிக் கல்லூரி, பட்டுக்கோட்டை.	ரூ.250/-	தனது சொந்த செலவிற்காகவும் பஸ் செலவிற்காகவும் வைத்திருந்ததாக கூறினார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்தப் பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது
8)	திருமதி.V.G. மகேஷ்வரி, வயது 49/2026, த/பெ. கணேசன், நிர்வாகப் பணியாளர், (சுயநிதிப் பிரிவு), SDS பாலிடெக்னிக் கல்லூரி, பட்டுக்கோட்டை.	ரூ.4282/-	கல்லூரியின் பண்டகத்தில் (Store) எழுதுபொருட்கள் மற்றும் திண்பண்டங்கள் விற்ற வகையில் கிடைத்தப் பணம் என்று தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்தப் பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

(20) மேற்படி திடீர் சோதனையின்போது கீழ்கண்ட ஆவணங்கள் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

(i) Shivarajanaathan M, B.E., Electronics And Communication Engineering, Thiruvarur -9789485040 - shivarajnaathan2004@gmail.com என்பவரது சுய-விபரக்குறிப்பு (Resume) மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட சான்றிதழ்களின் நகல்கள். (மொத்தம் 16 பக்கங்கள்)

(ii) K.Subha, 5/12, Northkuthagai, Ayyakaranpulam-1, Vedaraniyam, Nagappattinam என்பவரது சுய-விபரக்குறிப்பு (Resume) மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட சான்றிதழ்களின் நகல்கள். (மொத்தம் 16 பக்கங்கள்)

(iii) SDS பாலிடெக்னிக் கல்லூரியில் பயின்றுவரும் மாணவர்களின் விபரத்தின் சான்றிட்ட நகல்கள். (மொத்த 28 பக்கங்கள்)

(iv) SDS பாலிடெக்னிக் கல்லூரியிலிருந்து Technical and Ministerial Staff Vacancy தொடர்பான கடித போக்குவரத்து கோப்பின் சான்றிட்ட நகல். (மொத்த 16 பக்கங்கள்)

(v) SDS பாலிடெக்னிக் கல்லூரியின் Attendance for the month of SEP 2026, Civil, First Year, ECE, MECE, EEE, Computer, Office, Ministerial -இன் அசல். (மொத்த 10 பக்கங்கள்)

(vi) பட்டுக்கோட்டை பாலிடெக்னிக் சொசைட்டி தீர்மான நகல் விபரங்கள் அடங்கிய கோப்பு.

(vii) பட்டுக்கோட்டை பாலிடெக்னிக் சொசைட்டி – வரவு செலவு அறிக்கை அடங்கிய கோப்பு.

(viii) பட்டுக்கோட்டை பாலிடெக்னிக் சொசைட்டியின் Income Tax கோப்புகள் அடங்கிய SARAL COPY BANK என்ற எழுதப்பட்ட கோப்பு.

இந்த திடீர் சோதனை நடவடிக்கைகள் மற்றும் மகஜர் 01.10.2026 ஆம் தேதி 01.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

இந்த திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட மேற்படி ரூ 10,00,000/–பணம் (500 X 2000), ஆவணம், வாக்குமூலங்கள் தயார் செய்யப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றை இத்துடன் இனைத்து இன்று 01.10.2026 ஆம் தேதி 13.00 மணிக்கு ஆஜர் படுத்துகிறேன். இது குறித்து சட்டபடி உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன் (sd) திரு.S.ஷேக்உமர்ஷா, துணை வட்டாட்சியர் (தேர்தல்), ஆய்வுகுழு அலுவலர் (பொறுப்பு). வட்டாட்சியர் அலுவலகம், பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்,

Sir, received the complaint on 01.10.2026 at 13.00 hrs. found prima facie for the allegation of the complaint. Since the matter is intimated to the SP/CR, V&AC, Chennai obtained permission from the SP/CR, V&AC, Chennai and registered a case in Thanjavur V&AC Crime Number 09/2026 U/s 106 of BNSS and 7, 7A, 8 r/w 12 of Pc Act 1988 (as amended in 2018) on 01.10.2026 at 13.30 hrs (sd) R. Arun Prasad, Inspector of Police, V&AC, Thanjavur.

Sir, The original FIR along with the Complaint, Surprise Check Proceedings and statements of accused are sent to the Principal District and Sessions Judge, Court, Thanjavur, other copies sent to the senior officers and concerned investigation officer.

1/10/26

Inspector of Police,
Vigilance and anti–Corruption
Thanjavur.

Name and address of the accused in conlumn Number 7 of the FIR in Thanjavur V&AC Crime Number 09/2026 U/s 106 of BNSS and 7, 7A, 8 r/w 12 of Pc Act 1988 (as amended in 2018).

1. செல்வி. M. பிரபா, ME., த/பெ முத்துசாமி, தாளாளர், S.D.S. Polytechnic, பட்டுக்கோட்டை.
2. திரு.க,ரமேஷ், த/பெ.கணேசன், முதல்வர், S.D.S. Polytechnic, பட்டுக்கோட்டை. மற்றும் சிலர்.

1/10/2026

Inspector of Police,
Vigilance and anti-Corruption
Thanjavur.